**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.203/2024**
**வழக்கு சாட்சி PW1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெருமாள் | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : -- |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : சுமார் 43 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**(CMP No.01/2025 மனுவானது கடந்த 24.11.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை)**
**( 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை பாரதிய குடிமக்கள் சட்டம் பிரிவு 355ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

<u>1, 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 2 எதிரிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் என்னுடைய அத்தை மகன்கள் என்றால் ஆமாம். 1, 2 எதிரிகளின் பாட்டி பழனியம்மாள் என்பவருக்கு நாகப்பன்பட்டியில் வீடு உள்ளது என்றால் ? ஆமாம். மேற்படி வீட்டினை எதிரிகள் ரவிக்குமார் , மணிகண்டன் ஆகியோர்களுக்கு எழுதி வைத்துவிட்டதால் எங்களுக்கும், எதிரிகளுக்கும் மனஸ்தாபமும், முன் விரோதமும் இருந்தது என்றால் ? விரோதம் இல்லை. பிரச்சனை சம்பந்தமாக நாகப்பன்பட்டி ஊர் பண்ணாடி பழனிச்சாமி என்பவரை விட்டு பைசல் பேசினோம் என்றால் ? இல்லை. எங்கள் குடும்பத்திற்கும், எதிர்களின் குடும்பத்திற்கும் வீடு பிரச்சனை இருந்து வந்தது என்றாலும், பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனை தீர வில்லை என்பதால் அந்தவீடானது தற்போது பயன்படுத்தாமல் உள்ளது என்றால் ? ஆமாம். மேற்படி பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு நடக்காத ஒரு பிரச்சனையை நடந்ததாக முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் ? இல்லை. என்னுடைய மகன்களை மது போதைக்கு அடிமையாக்கிவிட்டதாக சொல்லி பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் ? இல்லை. எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நானாகவே காயத்தை

ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் ? சரியல்ல. சம்பவத்தன்று நானும் மற்றவர்களும் எதிரிகளின் வீட்டிற்கு சென்று சண்டை போட்டோம் என்றாலும், பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்த போது நாங்கள் ஓடி வந்தோம் என்றாலும், அவ்வாறு நான் ஓடி வந்த போது கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்றாலும் ? சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளவாறு சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் ? சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் இருந்த வீடு சம்பந்தமான பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் ? சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் ? இல்லை. சம்பவத்தன்று நான் மது போதையில் இருந்தேன் என்றால்? சரிதான். சாட்சி மீண்டும் சம்பவத்தன்று நான் மது போதையில் இல்லை என்று பதில் அளித்தார். சம்பவத்தன்று நான் மது போதையில் இருந்ததாகவும், மருத்துவனைக்கு சிகிச்சைக்கு சென்ற போது மது போதையில் இருந்ததாகவும் இந்நீதிமன்றத்தில் அ.சா.9 மருத்துவர் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும், நான் மது போதையில் இருந்தபோது பிரச்சனை ஏற்பட்டதில் எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாமல் ஆஜர் எதிரிகள் மீது பொய்யாக புகாரை கொடுத்துள்ளேன் என்றால் ? சரியல்ல. சம்பவம் நடந்ததாக நான் சொல்லியுள்ள நேரம் இருட்டான நேரம் என்றால் ? மாலை 7.30 மணி முதல் 7.45 மணி வரை இருக்கும். சம்பவம் நடந்ததாக நான் சொல்லக்கூடிய பகுதியானது வீட்டு வாசல் என்றால்? முத்தம்மாள் வீட்டிற்கு முன்புறமாகும். நான் சொல்வது தவறு என்றாலும், முத்தம்மாள் என்பவருடைய வீடு அந்த பகுதியில் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த பகுதியில் சத்தம் போட்டது யார் என்றால் ? ரவிக்குமார் தான் சத்தம் போட்டார். நான் சத்தம் போட்டதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ? சரிதான். பிரச்சனை ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ள பகுதி இருட்டான பகுதி என்றால் ? வீரக்குமார் என்பவர் வீட்டில் லைட் எறிந்து கொண்டிருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்லியுள்ளதை போல் வீரக்குமார் என்பவரின் வீடு அந்த பகுதியில் இல்லை என்று சொன்னாலும், சரியல்ல. ஏற்கனவே இருந்த முன் பகையில் காரணமாக ஆஜர் எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.02 13:14:43 +0530

**சார்பு நீதிபதி**
**ஒட்டன்சத்திரம்**